# கம்பம் நகராட்சி

**2023-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13.03.2023-ஆம் நாள் திங்கள்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கம்பம் நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**கூட்டப்பொருள்**

| | |
|---|---|
| 1) | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 01/2023 மற்றும் 02/2023-ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். |
| | **தீர்மான எண்.243** பதிவு செய்யப்பட்டது. |
| 2) | நகராட்சி பொறியாளர் அவர்களின் 01/2023 மற்றும் 02/2023-ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். |
| | **தீர்மான எண்.244** பதிவு செய்யப்பட்டது. |
| 3 | கம்பம் நகராட்சி பொதுநிதி 2022-2023-ன் கீழ், கம்பம் நகராட்சி வார்டு எண். 18 ஆலமரத்து தெருவில் (நாட்டுக்கல் தெற்கு) அமைந்திருக்கும் ஒக்கலிகர் மகாஜன சங்க மேற்குத்தெரு சாவடிக்கு முன்பு செல்லும் கழிவுநீர் வாய்க்கால் சேதமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே மேற்காணும் பகுதியில் மழைநீர் வடிகால் , அமைக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம்அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 357/2022/இ1) |
| | **தீர்மான எண்.245 அனுமதிக்கப்பட்டது.** |
| 4 | கம்பம் நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.4, ஓடைத்தெருவில் அமைக்கப்பட்டுள்ள நவீன ஆடு அடிக்கும் தொட்டி செயல்பாட்டிற்கு (Consent to Operate) தேனி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் செயல்முறை கடிதம் எண். F.0599TEN/RS/DEE/TNPCB/TEN/A/2022, 13.09.2022– ல் 31.03.2023 வரை அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. தற்போது 2023–2024– ஆம் ஆண்டிற்கான அனுமதி காலத்திற்கு தேனி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் செயல்முறை கடிதம் எண். F.TEN0719/RS/DEE/TNPCB/TEN/2023, 08.02.2023-ஆம் தேதிய கடிதத்தில், நவீன ஆடு அடிக்கும் தொட்டி செயல்பாட்டிற்கு (Consent to Operate) புதுப்பித்தல் கட்டணம் ரூ.10,000/-ஐ செலுத்த தெரிவித்துள்ளதன்பேரில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மேற்காணும் தொகை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண். 3595/2016/இ1) |
| | **தீர்மான எண்.246 அனுமதிக்கப்பட்டது.** |
| 5 | கம்பம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, கம்பம் நகராட்சிக்குச் சொந்தமான கம்பம்-குமுளி சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2018-19-ன் கீழ், ரூ.410.00 இலட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP)– செயல்பாட்டிற்கு (Consent to Operation) தேனி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் செயல்முறை கடிதம் எண். F.0857TEN/RS/DEE/TNPCB/ A/2022 – 16.08.2022-ஆம் தேதிய கடிதத்தில் 31.03.2023 வரை அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது தேனி, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் செயல்முறை கடிதம் எண். F.TEN0903/RS/DEE/TNPCB/ TEN /2023 - 08.02.2023-ஆம் தேதிய கடிதத்தில், கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் செயல்பாட்டிற்கு (Concent to Operate) புதுப்பித்தல் 31.03.2023 வரை முடிவடைவதால், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெறும் பொருட்டு (Concern to Operate) ரூ. 43,600/–ஐ தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், தேனிக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண். 2121/2019/இ1) |
| | **தீர்மான எண்.247 அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 6 | இந்நகராட்சி பொதுமக்களின் அத்தியாவசிய குடிநீர் விநியோகத்திற்கு 2023-2024ம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டிற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| 6 | |

| வரி சை எண் | பணிகள் விபரம் | உத்தேர மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நகரில் 1 முதல் 17 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் கசிவுகள்,குடிநீர் விநியோக வால்வுகள் ஏற்படும் பழுதுகள் ஆகியவற்றை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்தல். | 9.90 |
| 2 | நகரில் 18 முதல் 33 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் கசிவுகள்,குடிநீர் விநியோக வால்வுகள் ஏற்படும் பழுதுகள் ஆகியவற்றை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்தல் | 9.80 |
| 3 | நகரில் 1 முதல் 17 வார்டுகளிலும் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட சிறு மின் விசைமோட்டார்கள் மற்றும் பொதுகழிப்பறைகள் இதர பயன்பாடுகளுக்குரிய மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்தல். | 9.95 |
| 4 | நகரில் 18 முதல் 33 வார்டுகளிலும் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட சிறு மின் விசைமோட்டார்கள் மற்றும் பொதுகழிப்பறைகள் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்தல்.. | 9.90 |
| 5 | லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் குடிநீர் விநியோகத்திற்கு தேவையான கேஸ் குளோரினேசன் சிலிண்டர் வாங்குதல். | 7.45 |
| 6 | லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் குடிநீர் விநியோகத்திற்கு பொருத்தப்பட்ட கேஸ் குளோரினேசன் பிளான்டில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல். | 6.00 |
| 7 | லோயர்கேம்ப் நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள்,மின் தொடர்பு சாதனங்களில் ஏற்படும் பழுதகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல். | 7.20 |
| 8 | நகரில் 33 வார்டுகளிலும் உள்ள அடிம்புகளில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் | 1.10 |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு** : 1) மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம். 2) மேற்படி செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்.248 அனுமதிக்கப்பட்டது.** |
| 7 | இந்நகராட்சி வார்டு எண்1முதல்33 வரை பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீரை ஒவ்வொரு மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் சேகரமாகும் குடிநீர் மாதிரி எடுத்து மாதம் தோறும் தேனி மாவட்ட குடிநீர் குடிநீர் பரிசோதனை மையம்,சென்று பரிசோதனைகள் செய்து சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ50,000/-(ருபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்)மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம்அனுமதிக்கலாம். 2) மேற்படி பணிக்கான செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டு குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண்.249 அனுமதிக்கப்பட்டது.** |
| 8 | இந்நகராட்சி வார்டு எண்.23, வரதராஜபுரம் கிழக்கு குறுக்கு தெரு, வார்டு எண்.24, கிராமச்சாவடி குறுக்கு தெரு மற்றும் வார்டு எண்.26 பார்க் சாலை ஆகிய பகுதிகளில் பகிர்மான குழாய்கள் மற்றும் உள்ளிணைப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.50,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

**அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம்அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022-2023-,இன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.250 அனுமதிக்கப்பட்டது.**

9 இந்நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் வாகனம் டிராக்டர் டி.சி.யு9465 மற்றும் டிரெய்லர் டி.சி.யு9769 வாகனத்திற்கு தகுதி சான்று 21.03.2023 உடன் முடிவடைவதால் மராமத்து பணிகள் மற்றும் தகுதி சான்று பெறுவதற்க 04.0.1.2023ம் தேதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விபரப்படி 3 விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| விலைப்புள்ளி நிறுவன விபரம் | | ருபாய் |
|---|---|---|
| 1 | நவீன் ஆட்டோ ஒர்க்ஸ்,குமுளி ரோடு கம்பம். | 59450.00 |
| 2 | சின்சீர் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் குமுளி ரோடு கம்பம். | 65340.00 |
| 3 | முத்து ஆட்டோ ஒர்க்ஸ் குமுளி ரோடு கம்பம். | 67790.00 |

**அலுவலகக்குறிப்பு** : 1) **உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்**.**மற்றும் வரப்பட்ட முன்று விலைப்புள்ளிகளில் ருபாய்** 59450.00/-**க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள** நவீன் ஆட்டோ ஒர்க்ஸ்,குமுளி ரோடு கம்பம்.விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2)**மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியின் 2022-2023 கீழ்மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.** **(ந.க.எண்.3139/2022/இ2)**

**தீர்மான எண்.251 அனுமதிக்கப்பட்டது.**

10 இந்நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் வாகனம் டிராக்டர் டி.சி.யு9465 மற்றும் டிரெய்லர் டி.சி.யு9769 வாகனம் மற்றும் ஈப்பு வாகனம் TN60X0499 க்கு காரப்பீட்டு காலம் 26.03.2023 தேதியுடன் முடிவடைவதால் 2023-2024 ஆண்டிற்கு வாகனத்திற்கு காப்பீட்டு கட்டணம் செலுத்த கீழ்கண்டவாறு செலவினங்களுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | பணிகள் விபரம் | செலவினத்தொகை ரு |
|---|---|---|
| **1** | டி.சி.யு9465 மற்றும் டிரெய்லர் டி.சி.யு9769 காப்பீட்டு கட்டணம் | **20966.00** |
| **2** | ஈப்பு வாகனம் TN60X0499 வாகன காப்பீட்டு கட்டணம் | **9791.00** |

**அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)**மேற்படி** பணிக்கான **செலவினத்தினை 2022-2023-ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்**.

**தீர்மான எண்.252 அனுமதிக்கப்பட்டது.**

11 இந்நகராட்சி சொந்தமான குடிநீர் விநியோகம் செய்யும் டிராக்டர் TCU -9465 மற்றும் டிரைலர் TCU - 9769 வாகனத்திற்கான சாலை வரி 2023-2024-ஆம் ஆண்டு ஓராண்டு காலத்திற்கு செலுத்த அனுமதியும், அதற்கான உத்தேச தொகை ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)**மேற்படி** பணிக்கான **செலவினத்தினை** குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் **மன்றம் அனுமதிக்கலாம்**.

**தீர்மான எண்.253 அனுமதிக்கப்பட்டது.**

12 இந்நகராட்சி கீழ்காணும் பணிகள் செய்திட இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண்324/2023/இ2 நாள் 22.02.2023 அன்றுவரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை(ரு இலட்சத்தல்)** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டை விட** | |
|---|---|---|---|---|---|
| | | | | **சதவீதம் குறைவு** | **சதவீதம் கூடுதல்** |
| 1. | இந்நகராட்சி வார்டு எண்07 சுப்பிரமணிய கோவில் குறுக்கு தெரு மற்றும் சுவாமி விவேகானந்தர் குழக்கு குறுக்கு தெரு குடியிருப்பு விரிவாக்கப் பகுதிகளுக்கு குடிநீர் | 92,000 | M.வேல்பாண்டியன் | –0.17 | |
| | | | AP கன்ஸ்ட்ரக்சன் | | 0.08 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சீராக கிடைத்திட பகிர்மான குழாய்கள் பதித்தல் பணி. | | | | |

**அலுவலகக்குறிப்பு** : **வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட விலை விகிதம் திரு.** M.வேல்பாண்டியன் கம்பம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.254 அனுமதிக்கப்பட்டது.**

13 இந்நகராட்சி கீழ்காணும் பணிகள் செய்திட இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண்323/2023/இ2 நாள் 22.02.2023 அன்றுவரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை(ரு இலட்சத்தல்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட சதவீதம் குறைவு | மதிப்பீட்டை விட சதவீதம் கூடுதல் |
|---|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி வார்டு எண்16 நந்தகோபாலன் சாமி இரண்டாவது சாலை மற்றும் அதன் குறுக்கு தெருக்களில் குடியிருப்பு விரிவாக்கப் பகுதிகளுக்கு குடிநீர் சீராக கிடைத்திட பகிர்மான குழாய்கள் பதித்தல் பணி. | 270000 | எல்.ராஜேந்திரன் | – 0.13 | – |
| | | | வி.கிருஷ்ணன் | – | 0.44 |

**அலுவலகக்குறிப்பு** : **வரப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட விலை விகிதம் திரு**.எல்.ராஜேந்திரன்,கம்பம்.குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.255 அனுமதிக்கப்பட்டது.**

14 இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க குடிநீர் துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளின்படி 5 சதவீதம் உயர்வு செய்து 2023-2024ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலை சேதாரக் கட்டணத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | நீளம் | ஜல்லி | | தார்சாலை | | சிமெண்ட்சாலை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2022-2023 | 2023-24 | 2022-2023 | 2023-24 | 2022-2023 | 2023-24 |
| 1 | 0 முதல் 30 மீ வரை | ரூ.2013/- | ரூ.2114/- | ரூ.4273/- | ரூ.4487/- | ரூ.4926/- | ரூ.5172/- |
| 2 | 30 முதல் 90 மீ வரை | ரூ.3153/- | ரூ.3311/- | ரூ.5397/- | ரூ.5667/- | ரூ.6045/- | ரூ.6347/- |

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.548/2023/இ2)

**தீர்மான எண்.256 அனுமதிக்கப்பட்டது.**

15 கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் JCB வாகன எண். TN60 AU 9643-ற்கு 4 டயர்களும், 4 டியூப்களும் வாங்கி வழங்குவதற்கு இவ்வலுவலக விலைப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.165/2023/எச்1,நாள்.02.03.2023-இன்படி விலைப்புள்ளி கோரியதில் 09.03.2023 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|
| 1) | Sri Vinayaga Tyrees,Chinnamanur. | 101400/- |
| 2) | Anugraha Tyres, Cumbum | 99500/- |

குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Anugraha Tyres, Cumbum நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.165/2023/எச்1)

**தீர்மான எண்.257 அனுமதிக்கப்பட்டது.**

16 கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் குப்பைகளை அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் BOV (Battery Operator Vehicle) 18 வாகனங்கள் பேட்டரி பழுதடைந்த காரணத்தினால் இயக்க இயலாத நிலையில் இந்நகர்மன்ற தீர்மான எண்.159, நாள்.30.09.2022-இன்படி முதல் கட்டமாக 9 லித்தியம் பேட்டரிகள்

| | |
|---|---|
| | வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் 18.10.2022-ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் லித்தியம் பேட்டரியினை வழங்குவதற்கு யாரும் முன்வராத காரணத்தினால் தீர்மான எண்.159, நாள்.30.09.2022-இல் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.5,00,000/-யும் சேர்த்து தற்போது 25 எண்ணிக்கையிலான BOV வாகனத்திற்கு சாதாரண பேட்டரியினை தலா 1 வாகனத்திற்கு 4 எண்ணிக்கை பேட்டரி வீதம் மொத்தம் 100 எண்ணிக்கையிலான பேட்டரிகள் வாங்கி வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9,90,000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு. |
| | **அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.533/2023/எச்1) |
| | **தீர்மான எண்.258 அனுமதிக்கப்பட்டது.** |
| 17 | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் புகையில்லா போகி பண்டிகையினை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு கீழ்கண்டுள்ளவாறு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான செலவித்தொகை ரூ.10850/-க்கு (ரூபாய் பத்தாயிரத்து எண்ணூற்று ஐம்பது மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 1) | பச்சை விலை -2 | ரூ.3000/- |
| 2) | எனது குப்பை எனது பொறுப்பு பேனர் (4 X3) = 4 Nos | ரூ.1400/- |
| 3) | புகையில்லா போகி வண்டி பேனர் (4 x 3) = 7 Nos<br>குப்பை சேகரிக்கும் இடம் பேனர் (4 X3) = 4 Nos<br>விழிப்புணர்வு பேனர்(6 X4) = 3 Nos | ரூ.4950/- |
| 4) | விழிப்புணர்வு நோட்டீஸ் 500 Nos | ரூ.1500/- |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.469/2023/எச்1) |
| | **தீர்மான எண்.259 அனுமதிக்கப்பட்டது.** |
| 18 | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள கீழ்காணும் வாகனங்களுக்கு 2023-2024 ஆம் ஆண்டிற்கு சாலைவரி உத்தமபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது. எனவே உத்தேச செலவினத்தொகை ரூ.37500/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ.எண் | வாகனங்கள் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | TN.60.T 4507 | 5000/- |
| 2. | TN.60.Y 1959 | 4500/- |
| 3. | TN.60.Z 3591 | 6000/- |
| 4. | TN.60.T4524 | 5000/- |
| 5. | TN.60.T.4504 | 5000/- |
| 6. | TN60.AV.9643 | 12000/- |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.460/2023/எச்1) |
| | **தீர்மான எண்.260 அனுமதிக்கப்பட்டது.** |
| 19 | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE - வாகன எண். TN 60 AW 8353-இல் கிளர்ச் பிளேட் பழுதாகியுள்ளதை மாற்றி புதியதாக கிளட்ச் பிளேட், ரிலீஸ் பேரிங், சுவர்அசெம்பிள்செட் மாற்றிக்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.12,000/-ஐ மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. |
| | **அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்காணும் வாகனத்தின் பழுதினை சரிசெய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோருவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.532/2023/எச்1) |
| | **தீர்மான எண்.261 அனுமதிக்கப்பட்டது.** |

20 கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி எண் .TN.60 T4507-ற்கு எதிர்வரும் 20.03.2023 உடன் தகுதிச்சான்று காலம் முடிவடைதால் தகுதிச்சான்று பெறும் பொருட்டு மராமத்து பணிகளை செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.200000/-ற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்காணும் வாகன மராமத்து பணிகளை செய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.470/2023/எச்1)

**தீர்மான எண்.262 அனுமதிக்கப்பட்டது.**

21 இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் தட்டில் வைத்து பூ மற்றும் முறுக்கு விற்கும் குத்தகை உரிமம் கோருவதற்கு 10 முறை பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர அறிவிப்பு வெளியிட்டதில் 11வது முறையில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளனர்.

| வ.எண். | பெயர் | பொது ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ |
|---|---|---|
| 1 | ந. சரவணன்<br>த/பெ.மாசானம்<br>உலகத்தேவர் தெரு,கம்பம் | 21000 |
| 2 | பி.கே. திருப்பதி<br>த/பெ.பி. கல்யாணித்தேவர்<br>50/வார்டு 3 குரங்குமாயன் தெரு,<br>கம்பம். | 22400 |

மேற்கண்ட பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு.பி.கே.திருப்பதி என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகையாக ரூ.22400/-னை ஏற்று குத்தகை உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : கடந்த இரண்டு ஆண்டுகளாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வராததால் நகராட்சிக்கு வருவாயினை பெருக்கும் பொருட்டு மேற்படி முறையாக நடைபெற்ற பொது ஒப்பந்தப்புள்ளி உயர்ந்தபட்ச தொகை ரூ.22400/-னை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3294/2020/அ2)

**தீர்மான எண்.263 அனுமதிக்கப்பட்டது.**

22 இந்நகராட்சிக்கு சொந்தமான வருடாந்திர குத்தகை இனங்கள் 2023-2024-ஆம் ஆண்டுக்குரிய புதுப்பிக்கப்பட வேண்டிய குத்தகை விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எ ண். | இனம் | குத்தகைதாரர் பெயர் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1) | வாரச்சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | T. வாசிமலை | 2507748.00 |
| 2) | புதிய பேருந்து நிலைய கடை எண்.15 (சீல் வைக்கப்பட்டுள்ளது) | வி. கணேஷ்குமார் | 89839.00 |
| 3) | புதிய பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | T.S.டார்லிங்ஜெகதீசன் | 2331253.00 |
| 4) | புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | சத்யா த/பெ.முருகன் | 364855.00 |

மேற்கண்ட குத்தகை இனங்கள் குத்தகை உரிமம் பெற்ற குத்தகைதாரர்கள் 2023-2024-ஆம் ஆண்டிற்குரிய குத்தகை தொகை, குத்தகை இதர வரியினங்கள் செலுத்தக்கோரி 10.01.2023, 06.02.2023 மற்றும் 22.02.2023 ஆகிய மூன்று முறை அறிவிப்புகள் வழங்கியும் நாளதுவரை செலுத்தப்படவில்லை. எனவே மேற்கண்ட குத்தகை இனம் உரிமங்களை 31.03.2023 உடன் ரத்து செய்து விட்டு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு** : 1) மேற்கண்ட குத்தகைதாரர்களின் உரிமங்களை ரத்து செய்து மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும்.

2) நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3294/2020/அ2)

**தீர்மான எண்.264 வரிசை எண்.3 மற்றும் 4-னை தவிர்த்து இதர இனத்திற்கு ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

23 கம்பம் நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2021-2022-ஆம் ஆண்டு திட்டத்தின்படி, ரூ.775.00 இலட்சம் மதிப்பீட்டில் 100 சதவீத மான்யத்துடன் புதிதாக வாரச்சந்தை கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, நாள். 27.12.2021-இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும், அரசாணை (நிலை) எண்.15, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, நாள்.20.01.2022-இல் ரூ.775.00 இலட்சம் மதிப்பீட்டினை 70% அரசு மான்யத்துடனும் (542.50 இலட்சம்) 30% நகராட்சி பங்குத் தொகையுடனும் (232.50 இலட்சம்) நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்கு ஒப்பந்த விதிகளின்படி, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பந்ததாரருக்கு கடந்த ஆண்டு 06.04.2022 அன்று வழங்கப்பட்டுள்ள வேலை உத்திரவு கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண். | கட்டிடத்தின் பெயர் | எண்ணம் | உட்புற அளவுகள் |
|---|---|---|---|
| 1 | மார்க்கெட் உட்புற கடைகள் (Market Stall) | 262 | 2.40 மீ x 2.40 மீ (8.00 அடி x 8.00 அடி) |
| 2 | வெளிப்புற கடைகள் (Shopping Complex) | 23 | 3.00 மீ x 3.00 மீ (10.00 அடி x 10.00 அடி) |
| 3 | உணவகம் (Canteen) | 1 | 86.22 சதுர மீட்டர் (910.00 சதுரடி) |

தற்போது கட்டுமானப்பணிகள் 30/04/2023-க்குள் முடித்து பயனுக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளதால், மேற்படி திட்ட பணிகளுக்கு ரூ.232.50 இலட்சம் நகராட்சி பங்குத்தொகை செலவிடப்பட வேண்டியுள்ளதாலும், நகராட்சியின் வருவாய் பெருக்கும் நோக்கிலும், மேற்படி வாரச்சந்தையில் உட்புறம் கட்டப்பட்டுள்ள 262 திறந்தவெளி கடைகளிலும் வணிகம் செய்யும் வியாபாரிகளிடம் தினசரி சுங்கம் / ஆயம் வசூலித்துக் கொள்ளும் உரிமத்திற்கும், முன்புறம் ஷட்டருடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள ஒரு உணவகம் மற்றும் 23 தனிக்கடைகளையும் மாத வாடகைக்கு பொது ஏலம் (Pre - auction) விடவும், மேற்படி வாரச்சந்தையில் கட்டுமானப்பகுதி நீங்கலாக உள்ள திறந்தவெளி மைய பகுதியில் வழக்கமான பிரதிவாரம் செவ்வாய்கிழமை வாரச்சந்தையாக நடத்திக் கொள்ள ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3294/2020/அ2)

**தீர்மான எண்.265 அனுமதிக்கப்பட்டது.**

24 இந்நகர்மன்ற தீர்மான எண்.241 நாள்.25.01.2023-இல் கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, 15.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுநிதி 2022-2023 கம்பம் நகராட்சி வார்டு எண்.27, காந்திஜி பூங்கா தளத்தினை உயர்த்தும் பணிக்கு | 5,00,000/– | M/s,ஏ.பி.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | – | 0.04 |
| | | | ஆர்.சபீர் அலி | 26.66 | – |

**அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம்அனுமதிக்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு சமமாக M/s,ஏ.பி.கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் 0.04 சதவீதம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 201/2023/இ1)

**தீர்மான எண்.266 அனுமதிக்கப்பட்டது.**

25, கம்பம் நகராட்சியின் 2022-2023-ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு-செலவு திட்ட அறிக்கையும் 2023-2024-ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு -செலவு திட்ட அறிக்கையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1) மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண். 670/2023/பி1)

**தீர்மான எண்.267 அனுமதிக்கப்பட்டது.**

**ஒப்பம்/- நெ.வனிதாநெப்போலியன்**
நகர்மன்றத்தலைவர்
கம்பம் நகராட்சி.

இடம் :கம்பம்
நாள்: 09.03.2023